# ஆய்வில் உங்கள் உரிமைகள்: நிர்ப்பந்திக்கப்பட்ட புலம்பெயர்வு ஆய்வில் பங்குகொள்ளுபவர்களுக்கான தகவல் பத்திரம்

ஆய்வுச் செயற்பாட்டில் பங்குபற்றுவது என்பது உங்கள் கருத்துக்களைக் கேட்பதறகான ஒரு வாய்ப்பினைத் தருகின்றது. எனினும், அது இடைஞ்சலையும் தரக்கூடும்; உங்கள் நேரமும் பணமும் செலவழியக்கூடும், அத்துடன்/அல்லது உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ

அசௌகரியமானதாக நீங்கள் உணரவும் கூடும். இந்தத் தகவல் பத்திரம் முக்கிய சொற்களை விளக்குவதுடன் உங்கள் உரிமைகளையும் கோடிட்டுக் காட்டுகின்றது. *தன்னார்வத்துடன் கூடிய தகவலறியத்தரப்பட்ட ஒப்புதல்*



*(Voluntary, informed consent)* ஒரு ஆய்வில் பங்குகொள்வதா இல்லையா என்ற தீர்மானத்தினை நீங்கள் மட்டும்தான் எடுக்கலாம் என்பதைக் குறிக்கின்றது. இதனை மேலும் தனித்தனியாகப் பார்ப்போம்.

*தன்னார்வம் (Voluntary)* எனப்படுவது நீங்கள் சுயாதீனமாக முடிவெடுக்கலாம் என்பதே– பங்குபற்ற மறுப்பின் தண்டனைகள் ஏதுமில்லாமலும் பங்குபற்றச் சம்மதிப்பதற்கு (பெருந்தொகையான பணம் போன்ற) பாரிய நன்மைகள் எதுவும் இல்லாதிருப்பதும் ஆகும்.

- பங்குபற்ற மறுத்ததற்காக உங்களுக்கு பொருட்களோ சேவைகளோ நிராகரிக்கப்படக்கூடாது.
- ஒரு நபரோ, அரசு அலுவலரோ அல்லது நிறுவனமோ உங்களை ஆய்வில் பங்குபற்றும்படி பரிந்துரைத்திருந்தாலும் கூட நீங்கள் பங்குகொள்ளத்தேவையில்லை. நீங்கள் பங்குபற்றாவிடினும் ஒரே மாதிரியான  சேவைகளையும் மூலவளங்களையும் பெற்றுக்கொள்ள உரிமையுடையவர்களாவீர்கள்.

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0

**ஆய்வில் உங்கள் உரிமைகள்: நிர்ப்பந்திக்கப்பட்ட புலம்பெயர்வு ஆய்வில் பங்குகொள்ளுபவர்களுக்கான தகவல் பத்திரம்**

*தகவலறியத்தரப்பட்ட (Informed)* என்பது இந்த ஆய்வு எதனைப்பற்றியது என்பதை அறிந்து கொள்வதற்கும், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் இதில் பங்குபற்றுவதன் மூலம் பெறப்படக்கூடிய நன்மைகள் ,ஆபத்துகள் பற்றியும் அறியும் உரிமை கொண்டுள்ளீர்கள் என்று பொருள்படும்.

- இந்த ஆய்வு எவ்வளவு காலம் எடுக்கும் எனவும் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது எனவும் நீங்கள் கேட்க வேண்டும்.
- இந்த ஆய்வு எவ்வாறு பகிரப்படும் என்பதையும் ஆய்வின் முடிவுகளை நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பதையும் தெரிந்துகொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளீர்கள்
- நீங்கள் விளங்கிக்கொள்ளும் ஒரு மொழியில் இந்தத் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை உண்டு. வாய்வழி அல்லது எழுத்துமூலமான மொழிபெயர்ப்புச் சேவை உங்களுக்குத் தேவையாயின் நீங்கள் கேட்டுப் பெற முடியும்.
- ஆய்வுசெய்பவர் உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது மனக்குறைகள் இருப்பின் பயன்படுத்துவதற்குத் தேவையான தொடர்புகொள் தகவலைத் தரவேண்டும். நீங்கள் பிறகு இந்த ஆய்வில் பங்குபற்றுவதிலிருந்து விலகிக் கொள்ள விரும்பினாலும் தெரிவிக்க இந்த தொடர்பிலக்கத்தினைப் பயன்படுத்தலாம்.
- எந்த நேரத்திலும் கேள்விகள் கேட்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.

*சம்மதம் (Consent*) என்பது நீங்கள் மனப்பூர்வமாகப் பங்குபற்றுவதற்குச் சம்மதிக்கின்றீர்கள் என்று பொருள்படும்.

- உங்கள் சார்பில் வேறுயாரும் சம்மதம் தெரிவிக்க முடியாது (வயதிற்குவராதவர்கள் அல்லது புரிந்துணர்வு மட்டுப்படுத்தப்பட்ட நிலைகொண்ட வயதுவந்தவர்கள் தவிர: இந்தச் சந்தர்ப்பங்களில் அனுமதிச்சம்மதம் (Assent) பற்றிய தகவலுக்கு கீழே பார்க்கவும்)
- வழக்கமாக, ஆய்வில் பங்குபற்றுவதற்கான சம்மதத்தைத் தெரிவித்துள்ளீர்கள் என்பதை உத்தியோகபூர்வமாகக் காட்டும் கையொப்பத்தை இடுவதற்கான ஒரு படிவம் தரப்படும். கையொப்பம் இடுவதா இல்லையா என முடிவெடுக்க முன்னர் இந்தப்படிவம் பற்றி

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0

நீங்கள் உங்கள் உறவினர்கள், நண்பர்கள், குடியமர்வு அலுவலர், சமூக உறுப்பினர்கள் அல்லது வேறு எந்த நபருடனாவது கலந்துரையாடலாம். ஆய்வாளர் நீங்கள் கையொப்பமிட்ட படிவத்தின் ஒரு பிரதியை உங்களுக்குத் தரவேண்டும்.

- நீங்கள் விரும்பிக்கொண்டால், பதிலாக வாய்வழிச் சம்மதத்தைத் தெரிவிக்கக் கேட்கலாம். ஆய்வாளரின் ஆய்வு அறச் சபையினது Research Ethics Board (REB)[1] தேவைகளைப் பொறுத்து இது எப்போதும் செய்யப்படக்கூடியதாக இருக்காது.
- எந்த நேரத்திலும் நீங்கள் ஆய்விலிருந்து விலகிக் கொள்ளலாம் - நீங்கள் ஆய்வினைக் கட்டாயம் பூர்த்தி செய்யவேண்டும் என்ற எந்தக் கடப்பாடும் இல்லை. நீங்கள் விலகிக் கொள்ள முடிவெடுத்தால், உங்கள் தகவல்கள் எவற்றையும் பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.
- நீங்கள் குறிப்பாக எந்தக் கேள்விக்கும் பதிலிறுக்க மறுக்கலாம் அல்லது ஆய்வின் குறிப்பிட்ட ஒரு அம்சத்தில் பங்குபற்றுவதற்கு மறுக்கலாம்.

அனுமதிச் சம்மதம் *(Assent)* என்பது வயதுவந்தவர்க்குரிய வயதினை அடையாத ஒருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட புரிந்துணர்வுத் திறன்களைக் கொண்ட ஒருவர் பங்குபற்றச் சம்மதிப்பதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், ஒரு பெற்றார் அல்லது பாதுகாவலரும் ஆய்வு தொடர்வதற்குதவுமுகமான அனுமதியை வழங்கவேண்டும். அதாவது சம்மதம் மற்றும் அனுமதிச்சம்மதம் இரண்டுமே வேண்டப்படுகின்றன.

---

[1] A Research Ethics Board (REB) - ஆய்வு அறச் சபை என்பது ஆய்வாளரின் நிறுவனத்திலுள்ள ஒரு குழுவாகும். இந்தப்பத்திரத்தில் விபரிக்கப்பட்ட அறம்சார் தத்துவங்களை ஆய்வாளர் கடைப்பிடிக்கின்றாரா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு ஆய்வுச் செயற் திட்டங்களை மீள்பார்வை செய்யும் பொறுப்புடையது. ஆய்வில் உங்களது உரிமைகளை உறுதிப்படுத்தும்பொருட்டு REB பணியாற்ற வேண்டும்.

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0

**ஆய்வில் உங்கள் உரிமைகள்: நிர்ப்பந்திக்கப்பட்ட  புலம்பெயர்வு ஆய்வில் பங்குகொள்ளுபவர்களுக்கான  தகவல் பத்திரம்**



*ஒதுக்கம் மற்றும் அந்தரங்கம்பேணலுக்குமான உங்கள் உரிமை (Your right to privacy and confidentiality)* என்பது ஆய்வாளர் உங்களது தெரிவிக்கப்பட்ட சம்மதத்துடனல்லாது ஆய்வில் உங்களையோ அல்லது உங்கள் பதில்களையோ அடையாளம் காணமுடியாது என்பதாகும். சிந்திக்கப்படவேண்டிய சில விடயங்கள்:

*ஒதுக்கம் பேணல் (Privacy)* என்பது குறுக்கீடுகள் மற்றும் இடையூறுகளில்லாது இருப்பதற்கான உரிமையாகும். அத்துடன் உங்களைப் பற்றிய தகவல்களைக் கட்டுப்படுத்தும் உரிமையும் ஆகும்.

- மற்றவர்கள் உங்களையோ நீங்கள் ஆய்வில் பங்குகொண்டதையோ அறியமுடியாத வகையில் ஆய்வினை ஒரு ஒதுக்கமானதும் பாதுகாப்பானதுமான இடத்தில் நடத்தும்படி கேட்க உங்களுக்கு உரிமை உண்டு.
- ஆய்வின் முடிவுகளில் நீங்கள் அடையாளம் காணப்படுவதை அல்லது அடையாளம் காணப்பட வேண்டாததைத் தெரிவுசெய்ய உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் வெளிப்படையாகக் கேட்டுக்கொண்டபோதிலும், சிலவேளைகளில், ஆய்வாளர் உங்கள் உண்மைப் பெயரைப் பயன்படுத்த முடியாதிருக்கலாம். ஏனெனில் இது இவ்வாய்வில் தங்களை இனங்கான வேண்டாம் எனக்கேட்டுக்கொண்டவர்களை அடையாளப்படுத்தும்.
- ஆய்விலிருந்து பெறப்படும் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பததை அறியும் உரிமை உங்களுக்கு உண்டு.
- ஆய்வின் கண்டுபிடிப்புகளை நீங்கள் எவ்வாறு அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை ஆய்வாளர்கள் தெளிவாக விளக்கவேண்டும்.

*அந்தரங்கம்பேணல் (Confidentiality)* என்பது ஒருவரது தனிப்பட்ட தகவலின் பாதுகாப்பாகும்.

- சேகரிக்கப்பட்ட தகவலை ஏனையோர் பெறமுடியாதவாறு பாதுகாக்கும் வழியை ஆய்வாளர் கொண்டிருக்கவேண்டும்.
- உங்கள் தகவல்கள் எவ்வளவு காலம் சேமிக்கப்பட்டிருக்கும் என்பதுடன் யாருக்கு அவற்றைப் பார்க்க முடியும் என்ற விபரத்தையும் அறிய உங்களுக்கு உரிமை உண்டு.

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0

- ஆய்வாளர் இந்தத் தகவலை மூன்றாம் தரப்பினர்களுக்குக் கொடுக்கவோ விற்கவோ அனுமதி கிடையாது.
- சில சந்தர்ப்பங்களில், தன்னாபத்து அல்லது ஏனையர்வர்களுக்கான ஆபத்துகள் பற்றிய அறியத்தரவேண்டிய அறக்கடப்பாடுகள் ஆய்வாளருக்கு இருக்கலாம். சம்மதப்படிவத்தில் அவ்வாறான அந்தரங்கம் பேணல் எல்லைகள்பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். சந்தேகமிருப்பின் கேளுங்கள்! உங்களைப் பற்றிச் சேகரிக்கப்பட்ட எல்லாத் தகவல்களையும் அநாமதேயமாக்குவதனை (பெயர்நீக்கம் செய்வதனை) நிர்ப்பந்திக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.
- சில சந்தர்ப்பங்களில் குற்றம்சார் செயற்பாடுகள் பற்றிப் பொலீசாருக்குத் தெரிவிக்கவேண்டிய சட்டரீதியான கடப்பாடு ஆய்வாளருக்கு இருக்கலாம். சம்மதப்படிவத்தில் அவ்வாறான அந்தரங்கம் பேணல் எல்லைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். சந்தேகமிருப்பின் கேளுங்கள்! உங்களைப் பற்றிச் சேகரிக்கப்பட்ட எல்லாத் தகவல்களையும் அநாமதேயம் செய்வதனை நிர்ப்பந்திக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.
- இணையத்தின்வழியாக நடைபெறும் கருத்துக்கணிப்புகளில் பதிலளிக்கும் போது ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகளில் மின்சேவைசேகரிப்பிடங்களில் வைக்கப்படும் எந்தத்தகவலையும் அந்நாட்டு அரசாங்கம் பார்வையிடவசதி உண்டு என்பதனை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்தமாதிரியான நிலைமைகளில் ஆய்வாளர் எவ்வாறு அந்தரங்கம் பேணல் மற்றும் ஒதுக்கத்தை உறுதிப்படுத்துவார் என்பதைக் கேட்க உங்களுக்கு உரிமை உண்டு.

*அநாமதேயமானது* (*Anonymity*) அடையாளப்படுத்தக்கூடிய எந்தத் தகவலும் கிடையாதமையைக் குறிக்கும். குறிப்பிட்ட ஆய்வு முடிவுகளை எந்த ஒரு தனிநபருடனும் தொடர்புபடுத்த முடியாதவகையில் அமைந்திருத்தல் ஆகும்.

- இது மேலேகுறிப்பிட்ட அந்தரங்கம் பேணலிலுள்ள எல்லைப்பாடுகளுக்கான ஒரு தீர்வாகும்: சேகரிக்கப்படும் தகவல்கள் யாராலும் - ஆய்வாளரால்கூட - யார் இந்தத் தகவலுடன் தொடர்புடையவர் என அறிய முடியாதவகையில் சேகரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல் மூலம் பெறப்படலாம்.

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0

**ஆய்வில் உங்கள் உரிமைகள்: நிர்ப்பந்திக்கப்பட்ட புலம்பெயர்வு ஆய்வில் பங்குகொள்ளுபவர்களுக்கான தகவல் பத்திரம்**

- உங்களது குடிவரவு நிலைமை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையாயின், நீங்கள் உங்கள் தகவல்களை ஆய்வாளர் எவ்வாறு அநாமதேயமாக்குவதற்கான உத்தரவாதத்தை வழங்குவார் எனக் கேட்க வேண்டும். இல்லாவிடில் ஆய்வின் முடிவுகள் உங்களை ஆபத்தில் மாட்டிவிடலாம்.



*எந்த ஆபத்தையும் விளைவிக்காத கடப்பாடு ஆய்வாளருக்கு உண்டு (The researcher's obligation to do no harm)* என்பது உங்கள் நலம், மரியாதை, பாதுகாப்பு என்பவற்றை எப்போதும் கருத்தில் கொள்வர் என்பதாகும்.

- ஆய்வுச் செயல்முறையின் போது எந்தச்சந்தர்ப்பத்திலாவது நீங்கள் அசௌகரியத்தை உணர்ந்தால், நீங்கள் ஆய்வாளருக்கு அதனைத் தெரிவிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.
- ஆய்வாளர் தொடர்ந்தும் உங்களை அசௌகரியப்படுத்தினால், நீங்கள் நம்பிக்கை கொண்டுள்ள ஒருவருக்கு ( ஒரு நண்பர், குடும்ப அங்கத்தவர், குடியமர்வு சேவையாளர், ஒரு சமூக உறுப்பினர்) சொல்ல வேண்டும் அத்துடன் நீங்கள் ஆய்வாளரினது ஆய்வு அறச் சபையைத் (ஆர்ஈபி-REB) தொடர்பு கொள்ளவேண்டும். சம்மதப் படிவத்தில் இந்த தொடர்புத் தகவல் காணப்படவேண்டும். அல்லது நீங்கள் இணையத்திலும் தேடலாம். எல்லாப் பல்கலைக்கழகங்களும் வைத்தியசாலைகளும் ஆர்ஈபி அல்லது அதனை ஒத்த சபையைக் கொண்டுள்ளன.
- நீங்கள் உங்கள் கலாசாரம், மதம், இனத்துவ வரலாற்றை மதிக்கும் முகமாக மரியாதையுடன் நடத்தப்படுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளீர்கள்.

© Christina Clark-Kazak, 2021. Translation by Access Alliance Language Services. CC BY-NC-SA 4.0